செல்ல வேண்டுமென்று நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு மட்டுமல்லாமல், புதிதாக பை-பாஸ் சாலையிலே இருந்து சிறிய சாலை வழியாக செல்கிற போது, அந்த சாலை சரியில்லை என்று சொல்கிறார்கள். அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்கு பூவிருந்தவல்லி பேரூராட்சியிலே போதுமான நிதிவசதி இல்லை. அதனால் சிறப்பு நிதியை அளித்து, அந்தச் சாலையைச் செப்பனிட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையைப் பழுது பார்ப்பது உள்ளாட்சித் துறையினுடைய கையிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிற போது, பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் வருவது என்பது உங்களுக்கு நன்றாகத்தெரியும். புறநகர் சாலை வழியாகத்தான் பை-பாஸ் ரோட்டிலே வந்து, மீண்டும் கீழ்புறத்திலே வந்து மீண்டும் பேருந்துகளை அங்கே இயக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இத்தகைய இடர்ப்பாடுகள் எல்லாம் உள்ளன என்று அந்தத் துறையின் சார்பாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் போக்குவரத்துத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளையும் வைத்துக் கொண்டு பேசி, அதற்கான சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால் அதை ஆய்ந்து அவற்றை இயக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கல்லணைக் கால்வாயிலிருந்து பேராவூரணித் தொகுதி சி.எம்.பி. வாய்க்காலில் பாசனத்திற்குத் தண்ணீர் விடாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கல்லணைக் கால்வாயிலிருந்து பேராவூரணித் தொகுதி சி. எம். பி. வாய்க்காலில் பாசனத்திற்குத் தண்ணீர் வராதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 27] [திரு. எஸ் கண்ணப்பன்]

அறிக்கை

மேட்டூர் அணையில் இருந்து 12—6—1993 முதல் பாசனத்திற்கு தண்ணீர் விடப்பட்டது. 16—6—1993 முதல் கல்லணைக் கால்வாயில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்த நீர் இருப்புக்கு ஏற்ப கல்லணைக் கால்வாயில் விடப்படும் தண்ணீரை உள்முறைப் பாசனம் மூலம் நீர்ப்பங்கீடு செய்யப்பட்டது. பேராவூரணி பகுதி உட்பட எல்லா நிலங்களுக்கும் 15—9—1993 வரை உள்முறை பாசனமும், 16—9—1993 முதல் முழு அளவு தண்ணீரும் தொடர்ந்து பாசனத்திற்கு வழங்கப்படுகிறது. மேலும், தற்போது கல்லணைக் கால்வாய் பாசனப்பரப்பில் உள்ள அனைத்து பாசன ஏரிகளிலும் நீர் முழு அளவு இருக்கிறது.

டெல்டா பாசனப் பகுதியில் பெய்த மழை அளவினை கவனத்தில் கொண்டு, மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் விடுவது 12—10—1993 மதியம் 12 மணி முதல் நிறுத்தப்பட்டது. இருப்பினும், காவேரி ஆற்றில் மேட்டூர் அணைக்கு கீழே உள்ள பகுதியில் பெய்த மழையின் மூலம் கிடைக்கப்பெறும் நீர், கல்லணையிலிருந்து தொடர்ந்து கல்லணைக் கால்வாயில் அனுப்பப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையைப் பார்த்தேன். அந்த அறிக்கையின்படி, இன்று மேட்டூர் அணையில் சுமார் 80 அடியை எட்டுகிற அளவுக்கு தண்ணீர் நிரம்பி வந்து கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் கல்லணைக் கால்வாயில் இருந்து எங்கள் பகுதிக்கு 'ஷிப்ட்' முறையில் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு, சென்ற ஆண்டும் சரி, 1991-லும் சரி, 1992-லும் சரி, இரண்டாண்டுகளும் விவசாயிகள் மகிழ்ச்சியோடு விவசாயம் செய்து வந்தார்கள், இரண்டு சாகுபடி.

பிற்பகல் 12—05

ஆனால் இந்த ஆண்டு இயற்கையினுடைய சீற்றத்தாலும், காவிரி பிரச்சினையை தீர்க்க முடியாத காரணத்தினாலும், நமக்கு ஒரு சாகுபடி கூட செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. இருந்தாலும் தற்போது இருக்கின்ற நம்பிக்கையில் நிச்சயமாக மேட்டூரிலே தண்ணீர் வரத்து அதிகரித்து நிரம்ப தண்ணீர் கிடைக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனாலும் எப்படி தண்ணீர் வந்தாலும் பேராவூரணி பகுதி என்பது, நான் அடிக்கடி சொல்வதுபோல் 'டெயில் எண்டு' பகுதி, கல்லணைக் கால்வாயிலே மிகவும் கடைசியான பகுதி. அந்தப் பகுதியில் தண்ணீர் செல்வதற்கு ஒரு இடர்பாடு இருக்கிறது. அதாவது வெட்டிக்காடு பகுதியிலே இருக்கின்ற அந்த சி.எம்.பி.

[திரு. ஆர். சிங்காரம்] [1993 அக்டோபர் 27

வாய்க்கால் கரை மிகவும் பலவீனமாக இருக்கிறது. அதுதான் மெயின் காரணம். அந்தக் கரையை பலப்படுத்தினால் தண்ணீர் முழுமையாக கொண்டுபோக முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உடல் நிலையை வைத்து நான் சொல்கிறேன். கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மக்களுடைய உடல் நிலையைப் பொறுத்து, என் உடல் நிலையைப் பொருட்படுத்தாமல் பேச ஆசைப்படுகிறேன். அந்தக் கரையை வலுப்படுத்தினால் தண்ணீர் நிரம்ப போய் சேர முடியும். அந்த இடத்திலேயே 600 கியூசெக்ஸ் தண்ணீர்தான் வரமுடியும். 1,000, 1200 கியூசெக்ஸ் தண்ணீர் வந்தால்தான் டெயில் என்டு பேராவூரணிப் பகுதிக்கு தண்ணீர் போய்ச் சேர முடியும். ஆகவே, அந்த வெட்டிக்காடுப் பகுதியிலே இருக்கின்ற அந்த அணையை, அந்த சி.எம்.பி. வாய்க்கால் கரையை பலப்படுத்திக்கொடுத்து, 1000, 1200 கன அடி தண்ணீர் விட்டால்தான் அங்கே போய் சேர முடியும். ஆகவே, அதை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்தி, பேராவூரணி டெயில் என்டு பகுதி என்ற காரணத்தினால், தண்ணீர் போய் சேருவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணிப் பகுதிக்கு 15–9–1993 வரை உள்முறை பாசனமும், 16–9–1993 வரை முழு அளவுத் தண்ணீரும் தொடர்ந்து பாசனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மழை பெய்து இருக்கின்ற காரணத்தினால் 12–10–1993-லிருந்து மதியம் 12 மணி முதல் தண்ணீர் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியைப் பொறுத்தமட்டிலே, இது போன்ற கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் வராமல் இருப்பது குறித்து சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் நமது அரசின் கவனத்திற்கு வருகின்றபோது ஏற்கனவே இது நீண்ட நாட்களாக இருக்கின்ற பிரச்சினை, இந்த அரசு வந்தவுடனே வந்த பிரச்சினை அல்ல, காவிரிப் படுகையிலே இருக்கின்ற கரைகளையும், அங்கே இருக்கின்ற காட்டாமணக்குகளையும் அகற்றுகின்ற ஒரு மிகப் பெரிய சவாலாக இந்த அரசுக்கு இருக்கின்ற காரணத்தினாலேதான், நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டதன் பேரில், பல நடவடிக்கைகள், பல்வேறு துறைகளின் மூலம் இருக்கின்ற புல்டோசர்களை எல்லாம் வைத்து, மிகப் பெரிய அளவிலே கரைகளையும், படுகைகளையும் சீர்படுத்தினோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பாராட்டினார்கள். ஆகவே, இன்னும் அந்தப் பணிகள் முழுமையாக செய்வதற்கு பல கோடி ரூபாய் தேவைப்படுகிறது.

1993 அக்டோபர் 27] [திரு. எஸ். கண்ணப்பன்]

அரசு வருடாவருடம் அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சி.எம்.பி. வாய்க்காலைப் பொறுத்த மட்டிலே, உலக வங்கி திட்டத்திலே அடுத்த ஆண்டிலிருந்து சில பணிகளை செய்ய இருக்கிறோம். அப்படி வருகின்ற போது முடிந்த அளவு இந்த அரசு நிதி ஆதாரங்களை வைத்து அந்தப் பகுதியினுடைய கரைகளை சீரமைத்து கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் விட ஏற்பாடு செய்யும். அந்தப் பகுதியிலே பாசனம் சிறப்பாக இருப்பதற்கு எந்தவித தடையும் இல்லாமல் நடவடிக்கை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–94 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) பத்தாவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்).

நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு, அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும். எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.